
ISSN 2792-1050

# வெண்ணிலா

கவிதை மஞ்சரி.

VENNILA - Poetry Inflorescence.



40/=

இதழ்: 01 - ஏப்ரல் 2021.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்ணிலா

கவிதை மஞ்சரி.

VENNILA - Poetry Inflorescence.

இதழ்: 01 - ஏப்ரல் 2021.



ஆசிரியர்: கவிஞர் எஸ் ஏ கப்பார்.
முகவரி: 378/2, ஸம் ஸம் வீதி,
மருதமுனை - 03. # 32314,
இலங்கை.

மின்னஞ்சல்: kavignarsagaffar@gmail.com

தொடர்பு: 07 5858 5656.



ISSN 2792-1050


## முயற்சி புதிது !

சமூக வலைத் தளங்களைத் தடவிச் செல்லும் போதெல்லாம் அவ்வப் போது நண்பர்களால் பதிவிடப்படும் ஆச்சரியமான, பிரமிக்கத்தக்க ஆக்கங் களை - குறிப்பாக கவிதைகளைக் கண்டு கண்கள் நிலைகுத்தி நின்று விடுவதுண்டு. ஆனால் தொடர்ந்து படிப்பதற்கு சில வேளை முடியாமல் போய் விடுவதுண்டு. அவ்வாறான நேரங்களில் எனது முகநூல் நண்பர்களின் கவிதைகளையும் பெறுமதியான ஏனைய ஆக்கங்களையும் 'Google Keep' இணையத் தளத்தில் சேமித்து வைத்து நேரங் கிடைக்கும் போதெல்லாம் படிப்பதுண்டு.

அதுகூட சில வேளைகளில் சிரமமாகத் தோன்றும்.

அச்சு வடிவமேற்றி, புத்தக வடிவமைத்து மீண்டும் மீண்டும் படிக்கும் போது பல கவிதைகள் மனதுக்கு ஆறுதல் அளிக்கின்றன. அத்தோடு தொகுப்பிற்கு ஒரு பெயரிட்டு மகிழ வேண்டும் போலும் இருக்கும்.

அதனால் ஏப்ரல் 1978 காலப் பகுதியில் நான் வெளிக்கொணர்ந்த சஞ்சிகையின் பெயரையே சூடி மகிழ நினைத்தேன். அதன் விளைவு 'வெண்ணிலா - கவிதை மஞ்சரி' இன்று நண்பர்களின் கைகளில்.

இது ஒரு புதிய முயற்சி. தொடர்ந்து வெளியிட ஆவல். கால - நேரம், பக்கங்களின் எண்ணிக்கை என்ற வரையறை எதுவுமன்றி அவ்வப்போது நண்பர்களின் கைகளில் 'வெண்ணிலா - கவிதை மஞ்சரி' தவழும்.

ஆக - இவ்விதழில், **'என் கவிதைகள்'** பகுதியில் நான் எழுதிய சில கவிதைகள் இடம் பிடித்துள்ளன. அதுபோல் எனது முகநூல் நண்பர்களின் பல கவிதைகள் **'படித்தவற்றில் என் நெஞ்சைத் தொட்டுச் சென்ற கவிதைகள்...'** என்ற பகுதியில் இடம் பெற்றுள்ளன.

உங்கள் மேலான கருத்துகளையும் எண்ணங்களையும் எனது Messenger Inbox இல் பதிவிடுங்கள். அல்லது kavignarsagaffar@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பிவையுங்கள்.

- இதழாசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கவிதைகள்...

## பாவப்பட்ட ஜென்மம்

நெஞ்சு பட படக்கிறது
கேட்கும் புலன் கூர்மையாகிறது
தட புடல் என
தட்டும் சத்தமும் கேட்கிறது.

முன்வாசல் வெளிக்கதவு
அடிதாங்க முடியாது
குப்புற விழுந்து - எங்களைக்
கதிகலங்க வைக்கிறது.

கண்ணிமைக்கும் நேரத்தில்
எங்கள் வீடு குப்பைகளாலும்
கண்ணாடித் துண்டுகளாலும்
நிரம்பிக் கிடக்கிறது.

வீட்டின் பின்புறமிருந்த
மோட்டார் சைக்கிள்
துவிச்சக்கரவண்டி
தீக் கிரையாகி - இறுதி
யாத்திரை செல்கின்றன.

வந்தவர்களை யாரென்று
எங்களுக்குத் தெரியாது;
வந்தவர்களுக்கு எங்களையும்
யாரென்று தெரியாது.

எதற்காகச் செய்தார்கள்
ஏன் செய்தார்கள் - எங்களுக்கு
ஒன்றும் புரியவில்லை!
புரிந்துகொள்ளும் அளவிற்கு
நாங்கள் படித்தவர்களுமல்ல!

அன்றாடம் தொழில்செய்து
உழைத்து வாழ்பவர்கள்.
உறவுகளும் எங்களுக்கில்லை;
உடமைகளும் இப்போது
எங்களுக்குச் சொந்தமில்லை.

நானும் என்மனைவி மக்களும்
வீதிக்குவந்து விழிபிதுங்கி நிற்கிறோம்.

நாட்டைக் காக்கும்
நால்வகைப் படையினரும் - வீட்டு
நாற்சந்தி வீதியில்தான்
நின்று கொண்டிருக்கிறார்கள்.

பாவம் படைகள்!
பாவம் நாங்கள்!!
எய்தவர்கள் எங்கோ இருக்க
அம்புகளை நாம் நோவதேன்?
*(தினகரன் வாரமஞ்சரி 07-07-2019.)*

---

## என் உயிரின் கூறு

என்னிரண்டு கரங்களும்
ஏன் நடுங்குகின்றன?
என் உயிரின் கூறு
பனித் துளியாய்,
முதற் துளியாய்
என் கரங்களுக்குள்
கட்டுண்டு கிடப்பதாலா?

பெற்றவள் சலனமற்று
பெருமூச்சொன்றை
வெளிப்படுத்துகிறாளே,
அவளே மீண்டும் பிறப்பெடுத்து
அவதரித்துவிட்ட ஆச்சரியமா?

ஒரு சாதாரண அழகு
என்னைப் போன்ற
ஒரு சராசரி மனிதனின்
உறக்கத்தைக் கெடுத்துவிடுமல்லவா!

இது பேரழகாயிற்றே
என் உறக்கத்தை அப்படியே
மென்று தின்று
ஜீரணிக்க வைத்துவிடும்
என்ற பயமா!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கைகள் மீண்டும் நடுங்குகின்றனவே
என் உயிரின் கூறு
உயிர் பெற்று அசைகின்றதே!

நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறேன்;
பிஞ்சின் இதயம் படபடக்கிறது
என் உள்ளமும் பதைபதைக்கிறது.

என் இடது விழியின்
ஒரு துளி நீர்
பஞ்சுப் பாதங்களை முத்தமிடுகிறது;
பிஞ்சும் விழித்துக் கொள்கிறது
என் நெஞ்சினையும்
நீண்ட பெருமூச்சொன்று
வெறுமையாக்கிச் செல்கின்றது.

மூன்று சோடிக் கண்கள்
முக்கோணத் தேடலில் சங்கமிக்கின்றன;
இது தேடலின் வெளிப்பாடா
அல்லது தெய்வத்தின் விந்தையா
தெரியவில்லை.
*(தினகரன் வாரமஞ்சரி 22-09-2019.)*

---

## பட்டுக் கரங்கள்.

உன்
பட்டுக் கரங்கள்
என் மீது பட்டதும்
நான் புழுவாகி
நெளிகிறேன்.

என்னைப்
பட்டாம் பூச்சியாக்கி
உன் இதய அறைக்குள்
சிறைபிடித்துக்
கொள்வாயா?
*(மித்திரன் வாரமலர் 08-12-2019)*

## விதியில் அகப்பட்ட வீதிகள்

மழை அவ்வப்போது பெய்யும்
வெய்யில் எறிக்கும்
வெள்ளம் வழிந்தோடும்.

மழை நீரை உறுஞ்சிக்கொள்வோம்
வெய்யிலில் வெதுவெதுப்பா யிருப்போம்
வெள்ளத்திற்குத் தொட்டிலாகி
தாலாட்டுவோம்.

சாதி - மத ஏழை - பணக்கார
நல்லவன் - கெட்டவன்
உயர்ந்தோன் - தாழ்ந்தோன்
பேதமெல்லாம் எங்கள்
வேதத்திலில்லை.

புத்தாடை போர்த்தலென்ற
போர்வையில்- எங்கள் மேலாடைகளைப்
பெயர்த்தெடுத்து
கட்டாந் தரையில் வீசிவிட்டனர்.

ஆரவாரப்பட்டோம்; அவசரம்
வேண்டாமென்றோம்;
அடக்குமுறை அசிங்கமென்றோம்;
அடங்கிக் கிட என்றனர்.

அன்று,
மரங்களை வெட்டி
மழையினை வரவிடாது தடுத்த
மானிடர் அல்லவா நீங்கள்!

இன்று,
கம்பிகளையும் கற்களையும்
கூட்டுச்சேர்த்து வெக்கைக்குள்
புதைக்கப் போகிறீர்கள் - நீங்கள்
வெட்கங் கெட்டவர்கள்!

என்றோ ஒரு நாள்,
பொறுமையிழந்து பொங்கியெழுவோம்
பூகம்பங்களாகவும் எரிமலைகளாகவும் -
பொறுத்திருந்து பாருங்கள்!
*(தினகரன் வாரமஞ்சரி 18-08-2019.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அப்பச்சியின் கதை.

அப்பச்சி நல்ல மாநிறம்
தக்காளிப் பழம் போலிருப்பார்
நடுத்தர உயரம் மார்க்க அறிஞர்
பிரமச்சாரியும் கூட.

மேலாடை அணியமாட்டார்
சாரமை நன்றாக உயர்த்தி
இடுப்பில் பல மடிப்புகளை
உருவாக்கி உடுத்துக் கொள்வார்.

அவரது இடுப்பில் ஒருகொத்து சாவி
எப்போதும் அழகாகத் தொங்கும்.
அவரிடம் மார்க்கக்கல்வி கற்கும்
மாணவர்கள்
அந்த சாவிக்கொத்தை தொட்டுப்பார்ப்பர்.

சடுதியாக பக்கத்திலிருக்கும் பிரம்புகள்
அவரது கைக்கு மாறும்போது
சட்டென ஒதுங்கிக் கொள்வர்.
இவையெல்லாம் பழைய நினைவுகள்.

இன்று,
என் தூரத்து உறவினர் ஒருவர் வந்து
என் கையினைப் பிடித்துக்
கூட்டிச்சென்றார்.
போகும் வழியில் ஏதோவெல்லாம்
கதைத்துக் கொண்டு வந்தார்.
எனக்கு ஒன்றும் புரியவில்லை.

அப்பச்சி அசைவற்றுப் படுத்திருந்தார்.
கூட்டிச் சென்றவர் என் கைகளைப்
பிடித்து
என் அப்பச்சியின் கைகளோடு
உறவாடச் செய்தார்.
அப்பச்சியின் கைகள் குளிராயிருந்தன;
எனக்குப் பயமாய் இருந்தது.

அப்பச்சியை நான் பார்த்து
அவரது கைகளைத் தொட்டால்
ஊசலாடிக் கொண்டிருக்கும் உயிர்
பிரிந்துவிடும் என்று யாரோ
பிதற்றியிருக்க வேண்டும்.

▸▸

அப்பச்சி என் முகத்தையும்
இடது மூலையில் முடங்கிக்கிடக்கும்
பென்னம் பெரிய மரப்பெட்டியையும்
மாறி மாறிப் பார்ப்பது
எனக்கு நன்றாகப் புரிந்தது.

நாலு பக்கங்களும்
திறக்கக்கூடியதாகவும்
நாலு பக்கங்களும் இவ்விரண்டு
பூட்டுகளாக
ஆக மொத்தம் எட்டுப் பூட்டுகளும்
கொண்ட மிகப்பெரிய பெட்டியது.

அதுபோல்
ஒரு பெட்டியை நான்
எங்கும் கண்டதில்லை.

ஒரு பூட்டுக்கு மூன்று சாவிகளாக
இருபத்து நான்கு சாவிகள்.
அந்தச் சாவிக் கொத்துதான்
அப்பச்சியின் இடுப்பில்
எப்போதுமிருக்கும்.

இரண்டு நாட்களின் பின்,
அப்பச்சி இறந்துவிட்டதாகக் கூறி
என்னையும் அழைத்துச் சென்றனர்.
என் எண்ணமெல்லாம்
அந்தப்பெட்டிக்குள்
எனக்கென்று அப்பச்சி ஏதாவது
வைத்திருப்பார் என்பதுதான்.

அப்பச்சி இறந்து மூன்றாவது நாள்,
அந்தப் பென்னம் பெரிய பெட்டி
உறவினர் முன் திறக்கப்பட்டது.
உள்ளேயுள்ள பொருட்கள் எல்லாம்
ஒவ்வொன்றாகத் தரம் பிரிக்கப்பட்டன.

ஈயத்தாளில் பல்வேறு வடிவங்களில்
சுற்றப்பட்ட சில்லறைக் குற்றிகளை
சிறு சிறு குவியல்களாக்கினர்
உறவினரில் சிலர்.

புத்தம் புதிய வெள்ளைச் சாரம்கள்,
கைலேஞ்சிகள், துப்பட்டாக்கள்,

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிதாபுகள், அத்தர் சீசாக்கள்,
வாசனைப் பொருட்கள்,

பெனியன்கள், இடுப்புப் பட்டிகள்,
பரிசுப் பொருட்கள் என
பலவித பொருட்கள் அப்பச்சியின்
சொத்துகளாக வெளிவந்தன.

இவற்றையெல்லாம் வாங்கிச் செல்ல
வந்திருந்த கிராமத்து வர்த்தகர்
ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து
விலை நிர்ணயம்
செய்துகொண்டிருந்தார்.

ஓர் அழகிய சிறிய பெட்டி
அவரது கையில் அகப்பட்டது.
மேலும் கீழும் புரட்டிப்பார்த்தார்.
என் முகத்தையும் பார்த்தார்.
சிரித்தார்; என்னிடம் நீட்டினார்.
நான் உடனே வாங்கிக் கொண்டேன்.

அதைத் திறந்து பார்த்தேன்.
உள்ளே சதுரமாக நாலுபக்கமும்
ஒன்று, இரண்டு, மூன்று என
இலக்கங்களும் அரபு எழுத்துகளும்
வர்ணங்களாகக் காணப்பட்டன.

அப்பச்சி என்னையும் பெரிய
பெட்டியையும்
மாறி மாறிப் பார்த்தது எனக்கு
நினைவுக்கு வந்தது.

பெட்டியை எடுத்துக் கொண்டு
வீடு சென்றேன். வாப்பாவிடம்
காட்டினேன்.
வாப்பா ஆச்சரியத்துடன் பார்த்தது
எனக்கு வியப்பாக இருந்தது.

அது ஒரு நவீன கணக்கிடும்
இயந்திரம் என்பது பின்னர்
தெரியவந்தது.
அரபு நாட்டிலிருந்து வந்த யாரோ
அப்பச்சிக்குக் கொடுத்திருக்க
வேண்டும்.

ஒரு நாள்,
நாற்பதாவது சடங்கென்று
நானும் சென்றிருந்தேன் - அப்பச்சியின்
பெட்டியைக் காணவில்லை
பெட்டியையும் விலைக்குக்
கொடுத்துவிட்டார்கள் போலும்.

ஆறு மாதங்கள் சென்றிருக்கும்
உண்ணும்போது ஒரு நாள்
என் அன்னை சொன்னது
இன்னும் எனக்கு நினைவிருக்கிறது.

"அப்பச்சியின்
வளவுத் துண்டையும் விற்றுக்கொண்டு
வெளியூர் சென்றுவிட்டார்களாம்
வாப்பாவுக்கும் சொல்லாமல்."

அப்பச்சியின் நினைவுகளோடு
அணைத்துக் கொண்டேன்
என் அன்னையை!
● 24-04-2019.

## கண்கள்

காதலுக்குக்
கண்ணில்லை என்பார்கள்
அது பொய்!
கண்களுக்குத்தான்
காதல் செய்யத்
தெரியவில்லை
இதுதான் உண்மை!!

இல்லையென்றால் - உன்
பேரழகைக் கண்டும்
என் கண்கள்
நிலை தடுமாறி
சிலையாகிப்
போனதென்ன?
*(மித்திரன் வாரமலர் 01-09-2019)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாம்பு நிறப்பூனை.

சாம்பல் நிறமொரு குட்டி
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி
பாலின் நிறமொரு குட்டி
பாரதி அன்று கண்ட
பல் நிறப் பூனைகள்
பல எங்கள் முற்றத்திலே.

பூனைகள் மீது எனக்குப் பிரியம்
பூனைகளைப் பார்த்துக் கொண்டே
பசியாற வேண்டும் போலிருக்கும்
சீறிப்பாயுமழகும் சீண்டும்
விஷமத்தனமும்
மதில்மேல் இலாவகமாய்த்
தூங்குவதும்
எப்போதும் எனக்குப் பிடிக்கும்
கால்களை மேலே தூக்கி
விளையாடும் அழகு தனியழகு.

என் மனைவிக்குப் பூனைகளை
அவ்வளவாகப் பிடிக்காது
சிறுவர்கள் இருக்குமிடங்களில்
பூனைகள் நடமாடக்கூடாதென்பாள்
அவளது கூற்றுக்கு வலுசேர்க்க
அவ்வப்போது ஆதாரங்களும்
நாளேடுகளில் கிடைத்துவிடும்.

அதிகாலை வழக்கம் போல்
கதவைத் திறந்தபோது பாம்புநிறப்
பூனையைக் காணாதது எனக்குச்
சஞ்சலமாக இருந்தது.
சுதாகரித்துக் கொண்டு
தொழுகைக்குச் சென்றுவிட்டேன்.

தொழுகை முடிந்து வீடு வந்ததும்
முணுமுணுக்கும் சத்தங் கேட்டது
முன்கால்களை நக்க முற்பட்டது
பின்நோக்கி என்கால்களை எகிறினேன்
முன்நோக்கி நகர முடியாமல்
பாம்பு நிறப் பூனை அவதிப்பட்டது
இடது காலில் அடிபட்டிருக்கவேண்டும்
எனக்கு வருத்தமாக இருந்தது.
வீட்டு முற்றத்தை வேதனையுடன்
சுற்றிப் பார்த்தேன் - ஒரு
நீளமான தடி உடைந்துகிடந்தது
இந்தத் தடியால்தான் யாரோ
ஓங்கி அடித்திருக்க வேண்டும்
என எனக்குத் தோன்றியது.

தூரத்திற் கிடந்த அந்தத்தடியை
நேற்று என்மனைவி எடுத்துவந்து
கதவுக்குப் பக்கத்தில் வைத்ததும்
எனக்கு ஞாபகம் வந்தது.

என் மனைவிதான் கோபத்தில்
பூனை மீது எறிந்திருப்பாளோ
என்ற சந்தேகம் வலுப்பெற
பூனைக்குப் பூச தைலம்தேடி
பதுங்கிப்பதுங்கி உள்ளே
நுழைந்தேன்.

பாவம் அந்தப்
பாம்புநிறப் பூனை - இன்னும்
எத்தனை நாட்கள்தான்
தத்தித்தத்தி அலையப்போகிறதோ?
● 27-11-2019.

---

## என் இதயம்.

உன்னை
என் விழிகள்
நோட்டமிடும்
போதெல்லாம் - நீ
ஏன் வெட்கப்படுகிறாய்?

என் விழிகள்
தேடுவது - உன்னுள்
துடித்துக் கொண்டிருக்கும்
என் இதயத்தை
என்றறியாமல்!
*(மித்திரன் வாரமலர் 01-12-2019)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்பழக்காரியும் நானும்.

காலை ஏழரை மணிக்கு
சாலையோரப் பத்திரிகைக் கடையை
நாடும் போதெல்லாம்
நாவற் பழக்காரியும்
நன்முகத்துடன் அமர்ந்திருப்பாள்.

நீலநிற வாளியில் அழகிய
நாவற் பழங்கள் பளபளக்கும்.
நாவல் நிறத்தில்தான் அந்த
நாவற் பழக்காரியும் பளபளப்பாள்.

இலட்சணமான முகம்
இனிமையான குரல்
என்னையவள் பல தடவைகள்
நிமிர்ந்து பார்த்ததுண்டு -
அப்போதெல்லாம்
நான் நாவற்பழங்கள்
வாங்கியது கிடையாது.

நேற்றுப் பெய்த கடும்மழையினால்
இன்று பத்திரிகைகள் வரத்
தாமதமாயின.
நீண்ட நேரம் காத்திருந்ததால்
நாவற்பழக்காரியுடன் உரையாடும்
நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது.
நாவற்பழங்களும் ஒரு சுண்டு
பேரப்பிள்ளைகளுக்கு வாங்கிக்
கொண்டேன்.

நாவற்பழங்கள் உடல் நலத்திற்கு
நல்ல தென்றதோடு தனக்கு
நான்கு பிள்ளைகள் உண்டென்றும்
நால்வரும் மணம் முடித்து
நன்றாக உள்ளார்கள் என்றும்
தான் ஒரு விதவை என்றும் கூறினாள்.
ஏன் என்னிடம் சொல்லுகிறாள்
என எனக்குப் புரியவில்லை.

என்னை மகன் என்றழைத்தபோது
எனக்கு அதில் உடன்பாடில்லை
⏩

என்னைவிட ஐந்தாறு வருடங்கள்
அதிக வயதாக இருக்குமென
நினைத்தேன் - அதனால்
அம்மா என அழைக்க
எனக்குத் தோன்றவில்லை.

திடீரென ஏற்பட்ட ஒருவகை ஈர்ப்பு
மதங்களை மீறியும்
நிறங்களை மீறியும்
எங்களை ஆட்கொண்டது.

அவளது வயதினைக் கேட்டேன்
ஆச்சரியம் என்னைக் கௌவிக்
கொண்டது
அவளும் நானும் ஒரேநாளில்
அதிசயமாய்ப் பிறந்த மானிடப்பிறவிகள்
அறுபதைத் தாண்டி ஐந்தாறுமாதங்கள்.

அன்றிலிருந்து நாங்கள் நண்பர்கள்
அவ்வப்போது நாவற் பழங்கள்
அதிகமதிகமாக வாங்கிக் கொள்வேன்.
அன்று பேரப்பிள்ளைகளுக்குப்
பிடித்தவை
இன்று எனக்கும் பிடித்துப் போயின.
நாட்களும் நகர்ந்துகொண்டே போயின.

அன்றொரு நாள் நண்பி
நாவற் பழக்காரியைக் காணவில்லை
பக்கத்துக் கடைக்காரரிடம்
விசாரித்தேன்
இறையடி சேர்ந்து மூன்று
நாட்களென்றார்
இன்றுதான் அவருக்கும் தெரியுமாம்.

என் வயதுக்காரி இறந்து
மூன்று நாட்களாகி விட்டன
எனக்கு எழுதப்பட்ட நாழி
இன்றோ நாளையோ நானறியேன்.

மனதிற்குப் பாரமா யிருந்தது
உலர்ந்த பெருமூச் சொன்றை
உதிர்த்து விட்டு வேதனையுடன்
வீடு நோக்கி நடக்கலானேன்.
● 09-01-2020.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரட்டிடுவோம் கொரோனாவை!

உயிர்கொல்லி கொரோனா போல்
உயருள்ளம் நமக்கும் வேண்டும்
ஏழை பணக்காரன்
உயர்ந்தோன் தாழ்ந்தோன்
படித்தவன் படிக்காதவன்
வெள்ளையன் கறுப்பன்
முதியோன் இளையோன்
ஆடவர் பெண்டிர் என்றெல்லாம்
பேதம் பார்ப்பதில்லை
பேரிடியாய் வந்த இந்தக் கொரோனா.

கொரோனா போல் எமக்கும்
கொந்தளிக்கும் வீரம் வேண்டும்
வீழ்த்த வீழ்த்த வீரியங் கொண்டெழும்
வேட்கை நமக்கும் வேண்டும்.

மானிடராய்ப் பிறந்த நாம்
மரிப்பதற்கென்றுதான் பிறந்தோம்
எரிந்து சாம்பலாகி
ஏழனப் படுவதற்கல்ல.

கனவு மெய்ப்படும் வாழ்வு வேண்டும்
காலமெலாம் நம்வாழ்வு மேம்பட
வேண்டும் - ஆதலால்
கொரோனாக் கொலைக்களம் தவிர்த்து
கௌரவமாய் வாழத் துணிந்திடுவோம்.

நீயும் நானும் தாயும் சேயும்
நலமுடன் மீள வேண்டுமென
நாயனை வேண்டி நிற்போம்
மானிட உணர்வுகளை
மதித்து நடப்போம்
மக்களுடன் மக்களாய்
மகிழ்வுடன் வாழப் பழகிடுவோம்.

பெரும்பான்மை சிறுபான்மை
பேதம் நமக்கு வேண்டாம்
சாதி மத ஏற்றத்தாழ்வும்
சதவீதமும் நமக்கு வேண்டாம்.

▸▸

கைகளை நன்கு கழுவிடுவோம்
முகத்தினை முறையாக மூடிடுவோம்
கூடுவதைத் தவிர்த்திடுவோம்

தள்ளி நின்றும் வேடிக்கை
பார்க்காது
ஒன்றுபட்டு விரட்டிடுவோம்
பாடம் புகட்டவந்த கொரோனாவினை
பாரில் நின்றும் வெகு தூரம்.
● 07-12-2020.

---

# காதுகள்.

சுவருக்கும்
காதுண்டு என்பார்கள்.
காதுகளை மறைத்து
உன் உருவங்களை
வரைந்து கொண்டிருக்கிறேன்
என் சுவர்களில்;

நீயும் நானும்
பேசிக் கொள்வதை
உன்னையும்
என்னையும் அன்றி
சுவர்கள் கூட
கேட்கக் கூடாதென்பதால்!

சுயநலம்
என்று நீ
நினைப்பது எனக்குப் புரிகிறது.
உண்மையில் இது
என் நலம் சார்ந்தது
தடுக்காதே
நீ என்னை!
*(மித்திரன் வாரமலர் 01-09-2019)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன வாழ்க்கையிது!

ஆடுகள் மாடுகள்
அணில்கள் ஓணான்கள்
பறவைகள் வண்ணத்துப் பூச்சிகள்
அத்தனையும் உல்லாசமாய்
ஆரவாரமின்றி திரிகின்றனவே...

அந்தச் சின்னச் சிறு மான்களின்
கால்கள் எவ்வளவு
இலாவகமாக நடனமாடுகின்றன.
மரஞ் செடிகள் கூட
சப்தமிட்டு கானம் இசைக்கின்றனவே!

என் கால்கள் மட்டும்
ஏன் தடுமாறுகின்றன?
முகத்தையும் நன்றாக மூடியிருக்கிறேன்
மற்றவர்களிடமிருந்தும் விலகியிருக்கிறேன்
கைகளைக் கழுவிக் கழுவி
கைகளும் தேய்ந்துவிட்டன.
தனிமைப் படுத்தப்படப் போகிறோம்
என்றதும் தொடை நடுங்குகிறதே!

கொலைக்களம் கொண்டு செல்லப்படும்
மனித மிருகமாகிவிட்டேனா?
அங்கு சென்றதும் வீடு செல்வேனா?
மன்னிக்கவும்
கருகி மடியும் காலன்மடி செல்வேனா?
என் நெஞ்சை ஏதோ இறுக்கிப்பிடிக்கிறதே
என்ன சோதனை இறைவா!

நாதியற்ற ஏழைகளின் வாழ்க்கையென்பது
நாளடைவில் நாறிப்போகும் என்பது
நாமறிந்த உண்மைதானா?
என்ன வாழ்க்கையிது
என்னையே முறைத்துப் பார்க்க
வேண்டும் போலிருக்கிறது.
படைத்தவனிடம் முறையிடுவோம்
பயம் கவலை தவிர்ப்போம்
இல்லையென்று சொல்லும் மனம்
இல்லாதவன் இறைவன் அவனொருவனே!
*(தமிழன் வாரவெளியீடு 03-01-2021)*

---

## பஞ்சுப் பாதங்கள்.

அன்பே!
உன் பஞ்சுப் பாதங்கள்
கொடு வெயில்பட்டு
பொசுங்கிவிடும்
என்பதனால்,

தெருக்களுக்கு
நீர் தெளித்து
நீராட்டிக் கொண்டிருக்கிறேன்;
அவசரப்பட்டு வந்து விடாமல்
அங்கேயே நின்று விடு.

இப்படிக்கு,
உன் மழை.
*(மித்திரன் வாரமலர் 17-11-2019)*

---

இனி,
படித்தவற்றில்
என் நெஞ்சைத்
தொட்டுச் சென்ற
கவிதைகள் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறுக்கி ஊஞ்சல்.

வெங்காயத் தொலி
காற்றுக்கு சொட்டுத் தேனாகிவிட்டது
காற்று அதை
அந்தரத்தில் இருக்கின்ற
ஊருக்கெல்லாம்
கூட்டித் திரிகிறது

அங்கு ஆயிரம் ஆயிரம் ஊர்களும்
ஊர்முழுக்க புதுமைகளும்
புதையல்களும்
நிறைந்திருக்கின்றன
வெங்காயத் தொலி
ஒரு மந்திரவாதியைப்போல்
அத்தனைக்கும் சென்று
அனைத்தையும்
அறிந்து
புதையல்களையும்
தோண்டியெடுக்கிறது

காற்றில் பொங்கும் கடலை
வெங்காயத் தொலி
முத்தமிடுகிறது
காற்றினது கடற்கரையில்
நடந்து திரிந்து
அங்கும் காதல் உண்டானோர்
கொறித்துப் போட்ட கோதுகளை
பொறுக்கி எறிகிறது
கடற்கரையை துப்பரவு செய்கிறது

உயரத்துப் பூங்காக்கள் ஒன்று
தவறாமல்
வெங்காயத் தொலி
உயரமானவரிடமே விசாரித்து
அறிந்து
போய் பார்த்து
கண்டவைகளையும் காட்சிகளையும்
என்னிடமும் விபரிக்கிறது

இது வெங்காயத் தொலியென்றால்
நம்பலாமா
வெங்காயத் தொலிதான்
▸▸
கடைசியில் சனங்களும் வெங்காயத்
தொலிதான்

சதை கழித்து
தன் பார உடல் கழற்றி
போகாத இடமெல்லாம் போகிறது

மேலே பறந்த சின்னஞ்சிறு பூச்சியை
பெரிய மனது கொண்டிருக்கும்
வெங்காயத் தொலி
சந்தித்து குசலம் கேட்டு
கை தந்து
அன்பைக் கொட்டுகிறது
மண் இல்லாத
பச்சை முளையாத
எங்கோ வேர் இருக்கும்
ஊர் ஒன்றில்

சிங்காரமான ஊர்கள் காற்றில்
கிறுக்கி ஊஞ்சலும் இருக்கிறது
வெங்காயத் தொலி அதில்
ஆடுகிறது.

● **சோலைக்கிளி.**

---

•••

பாலுண்ணும் பாலகனைப் பற்றவைத்த
பாவியர்கள்
கால்கை வழங்காமல் சாகட்டும் -
மேலவனே
நெஞ்சுருகிக் கேட்கின்றோம் நீயேதான்
தீர்ப்பளிப்போன்
வஞ்சகர்பால் தண்டனையைத் தா.

● **காப்பியக்கோ**
**ஜின்னா ஷரிபுத்தீன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகம் கொத்தி

மாங்கனியை கொறித்திட
தாவுகிறது அணில்
மரமெங்கும்
காகம் கொத்தித் தீர்த்த
கோதெனவும்
வெளவால் கடித்துறுஞ்சிய
சாறெனவும்
உச்சிக் கந்தில் தொங்குகிறது பாதி
கிளைகளில்
ஏறியும், இறங்கியும்
ஏமாற்றத்துடன் திகைக்கிறது
எனது சாயலொத்த
அணிலிடம்
எப்படிச் சொல்வேன்
கண்கொத்திப் பாம்பென
காகம் கொத்திப் போன
கனியின் கதையை
மேலும்
உன்னையும்

● அலறி

## வலிக்கிறது

அந்த வானத்து
வெண்பஞ்சு மேகத்தில்
கொஞ்சம் குழைத்துச்
சாந்தாக்கி
கூட்டமாய் குவிந்த மேகத்தை
விலத்தி அதனிடையே
கண்ணாலொரு தூரிகை செய்து
எழுதிய ஓவியத்தை
அண்ணாந்து இரசித்தபடி நடந்து
கொண்டிருந்தேன் கடற்கரையோரமாய்
கால் பெருவிரலோரம் சுருக்கென்று
தைத்த முள்ளால் கலைந்து போனது
வரைந்துவைத்த ஓவியமும்
இரசனையும்.

● மருதூர் மௌஜுன்.

## சுவரொட்டி

தனிமையை நாடும் எனக்கு
என் தனிமைக்குச் சொல்ல
இவைகளும் இருக்கின்றன
தனிமையே நீ எனக்கு இருட்டு இல்லை
பலபக்கமும் வெளிச்சங்கள் பாய்ச்சும்
விளக்கு
இங்குள்ள கல்லும் மண்ணும்
தெரிகின்றன உனது
பெரிய தயவால்
நான் உன்னை அடிக்கடி
அழைப்பதையிட்டும்
நீ சபிக்கிறாயோ
சந்தோஷப்படுகிறாயோ
அது எனக்குத் தேவையில்லை
எனது முன்னேற்றத்திற்காக
நீ உன்னை
அற்பணிக்கிறாய்
அது போதும்
நீ எனது ஆணிவேர்
உன்னில் இருந்து நான் உறுஞ்சும்
தண்ணியால்
ஆரவாரிக்கிறேன்
உனது முந்தானையை விரித்து
அதில் என்னை
கொட்டிக் குவித்து எண்ணுகிறாய்
தினசரி நான் ஒவ்வொருவனாக
அதிகரிக்கிறேன்
நான் உன்னை கட்டியெழுப்பியிருக்கும்
சுவர் என்று
சிலர் நினைக்கிறார்கள்
உன்னைத் தகர்த்தெறியவும்
எத்தனிக்கிறார்கள்
அது முடியுமா
நீ எனது சுவர் என்றால்
நான் உன்னில் ஒட்டப்பட்டிருக்கும்
சுவரொட்டி
எதையாவது இந்தச் சனங்களுக்கு
சொல்லிக்கொண்டிருக்கிறேன்

● சோலைக்கிளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தின் சிலந்தி வலை

காலத்தின் சிலந்தி வலையில்
சிறு பூச்சியென
சிக்குண்டு தவிக்கிறேன் நான்
என் மீது விதியாக்கப்பட்ட
ஒரேயொரு ஆயுள்
நிரந்தரமற்றதென்று தெரிந்திருந்தும்
வலையிலிருந்து மீண்டுவர
அயற்சியுறாது போராடுகிறேன்
கூட்டிலிருந்து தப்பிக்காதவாறு
மீளவும் மீளவுமென
படு தீவிரமாக வலை பின்னுகிறது
காலத்தால் ஏவி விடப்பட்ட சிலந்தி
அது என்னை தின்று தீர்ப்பதற்கான
எல்லாக் காரியங்களையும்
செவ்வனே காய் நகர்த்துகிறது
காலத்திற்கு பசியெடுக்கும்
ஒவ்வொரு முறையும் வெவ்வேறு
பூச்சிகளை
ஏற்பாடு செய்கிறது சிலந்தி
நான் காலத்தின் சிலந்தி வலையில்
எத்தனையாவது பூச்சியோ.

● **ஜமீல்.**

---

**ஹைக்கூ:**

● ● ●

இரவின் மடியில்...
எங்கிருந்தோ காதில்வந்து பாய்கிறது
குழந்தையின் சிறுநீர்..!

● ● ●

மதுப் பிரியர்கள்
தாராளமாக அள்ளிச் சென்றனர்
வைரஸ் தொற்றை..!

● **அஸாத் ஏ சத்தார்.**

## நலமாக அமைக இந்நாள்!

நடந்தவை
நடந்து போக
கடந்தவை
கடந்து போக
நடப்பவை நல்லதாக
நடந்தினி மகிழ்ச்சி பொங்க
இனிதான வாழ்த்து,
இங்கே
இருள்மறைந் திடவே வாழ்த்து!

சிந்தனைத் தெளிவி னோடு
சீரான எண்ணத் தோடு
இங்கொரு மலர்ச்சி காண
இந்தநாள் உதவ வேண்டும்!

மடமைகள் போக்கிக் கொண்டு
இடர்களை அறுத்து - இங்கே
அடக்கமும் முடக்கமும் தான்
அகன்றிட உதவ வேண்டும்!

நோய் நொடி அகல வேண்டும்!
நிறை நலம் பெருக வேண்டும்
நிம்மதி நிலைக்க வேண்டும்!

● **பாலமுனை பாறூக்.**

---

**சென்ரியு:**

● ● ●

ஒரு வண்ணப் புடவை
அந்த இளம் விதவைக்கும்
தரலாமே
மறுவாழ்வு...!

**ஹைக்கூ:**

● ● ●

வயதான வியாபாரி
வாங்கிட மனம் வரவில்லை
மீதித் தொகை..!

● **அஸாத் ஏ சத்தார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதுவும் கடந்து போகும்

நீண்ட காலத்திற்குப் பிறகு சந்தித்து
முகமன் கூறிய பரவசத்தில்

நல்ல செய்தியின் ஆனந்தத்தில் மலரும்
வார்த்தையிலடங்காத
புதிய எண்ணங்களில்

பூந்தோட்டத்தில்
காணும் பக்கமெல்லாம் பரவிக் கிடக்கும்
பல்வண்ண நிறமியாய்

பூட்டிய வீட்டுக்குள் உலவும்
அமைதியுடன்
மனதில் குவிந்து கிடக்கும்
மிதமான மகிழ்ச்சியில்

கடந்து போகையில் மீண்டும் மீண்டும்
திரும்பிப் பார்க்க அடம் பிடிக்கும்
மனதின் தீவிர கிளர்ச்சியில்

அதீத கற்பனையில் விளைந்த
கவிதையொன்றின்
பெருமிதத்தின் திமிரில்

விடாப்பிடியாக கவனத்தை ஈர்க்கும்
வண்ணத்துப் பூச்சியின் அலைக்களிப்பில்

இள வயதுப் பிள்ளையை இடுப்பில்
தூக்கிக்கொண்டலையும் பூரிப்பில்
உதட்டிலிருந்து
நழுவும் முத்தமொன்றை பெறும்
ஆவலுடன்

மாலைக் கருக்கலில் கசிந்து கிடக்கும்
வெயில் கீற்றுக்களில் முகம்
நனைத்துக்கொண்டு மேற்கு வானில்
நட்சத்திரங்கள் முளைக்கையில்
பல நாள் பழகி பிரிவதன் துயரில்
ஒருவரை ஒருவர்
இறுகப் பற்றியதில்

நிமிடங்கள் கரைகையில்
கழிந்துபோன காலங்களின்
சேகரமாய் அடங்கிவிடுகிறது
இன்றைய நாளும்...

● நௌபல்.

---

## வாழ்வும் எல்லையும்!

அதிகாரம் ஆணவம் என்பதெல்லாம்
அதிக நாளிங்கே நிலைப்பதில்லை
பொதி கொண்டெவருமே பிறப்பதில்லை
போகின்ற போதிலும் பொதிகளில்லை!

எதிரிகள் நாமாக்கிச் சுமந்த போதும்
எல்லாமே மரணத்தில் முடிந்தே
போகும்
சதி செய்து வென்றிட ஒன்றுமில்லை
சாவொன்றே வாழ்விலே
இறுதியெல்லை!

புதிதாக இங்கொன்றும்
நிலைப்பதில்லை
புரிந்தே நாம் வாழ்ந்தாலேயேது
தொல்லை
விதி நெய்த சேலையாய் ஆனோம்
நாமும்
காலமே உடுத்திடக் கந்தலானோம்!

மதிகெட்டே யலைகின்ற கூட்டமானோம்
மன்னர்கள் என்றொரு கனவில்
வாழ்ந்தோம்
சதையாலே மூடிய எலும்பை வைத்து
சரித்திரம் படைத்திட ஆசை
கொண்டோம்!

புதைகின்ற காலங்களாகும் போது-
வெறும்
புள்ளியுமில்லாமல் முடிந்து போனோம்!
விதைக்கின்றோமாயிரம் பாவங்களை
வெறுமையாயிறுதியி லாகிப் போவோம்

● எம். எச். ஏ. கரீம்.

▸▸



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனக்கிறதே

எரியூட்டப்படும் ஜனாசாக்களே
நீங்களே சாட்சியாயிருங்கள்
இறுதித் தீர்ப்பு நாளில்
சதிகாறக் கும்பலுக்கெதிராய்
முறைப்பாடு செய்வதற்கு.

கலிமா மொழிந்ததுவா
நீங்கள் செய்த பாவம் - இல்லை
இத்தீவைப் பிரிப்பதற்கும்
ஆட்சி அதிகாரம் கேட்பதற்கா
அரங்கேறும் இக் கொடுமை.

தாய் நாடு ஒரே தேசம்
ஒரே ஆட்சி ஓர் கொள்கை
விட்டுக் கொடுப்பதுவும்
விலகிச் செல்வதும்தான்
நாம் கொண்ட கொள்கையென
வாழ்பவர் நாம், இருந்தாலும்
எம் பின்னால்
நிழலாய்த் தொடர்கிறதே
இனவாதப் பூதங்கள்.

நாட்டின் விடுதலைக்காய்
நம் முன்னோர் உழைத்தனரே
இன்றுவரை நாட்டிற்காய்
குரல் கொடுப்போர் நாம்தானே
தலைமுறைகள் பல கடந்தும்
ஒற்றுமையாய் வாழ்கின்ற
ஓரே சமூகம் நாம்தானே
வியாபாரம் வேலையென்றும்
நாமென்றும் நம் பாடென்றும்
வாழ்வதற்கா இந்த நிலை
ஐயையோ
நெஞ்சம் வலிக்கிறதே,
கண்களிரண்டின் ஓரங்களில்
இரத்தம் கசிகிறதே.

▸▸

பரம்பரை பரம்பரையாய்
பரந்தெங்கும் வாழுகின்றோம்
தாய்நாடு இதுவென்று
சாற்றுகின்றோம் ஓர் குரலாய்
மாற்றாந்தாய் மனத்துடனே
பார்க்கின்ற இனவாதம்
புரிகின்ற கொடுமைகள்
தொடர்கதையாய் நீள்கிறதே
நம் தலைமை, பெரியாரின்
சொற்கேட்டு
அடங்கி அனுசரித்து
செல்வதுவும் பிழையாமோ.

நம் தந்தை இப்றாகீம் (அலை)
தீக்குண்டம் கண்டவர்தான்
தீப்பிழம்பு வலுவிழந்த
சங்கதியும் புதிதில்லை
சுஹதாக்கள் பட்டியலில்
நீங்களும் சேர்ந்து கொண்டீர்
அசிங்கம் நிறைந்தோரின்
அரக்கத்தனம் இன்னும்
தொடரத்தான் போகிறது,
இருபதே நாளான
பச்சை மண் அச்சிசுவும்
அவர்களுக்கு விலக்கில்லை
அத் தீயோரின் அடங்காப் பசிச்
சுவாலை அடங்கும் வரை.

யா அல்லாஹ்,
றப்பே றஹ்மானே
உன் எண்ணம் எதுவென்று
உன்னடிமை யாமறியோம்
சுஜூதினிலே வீழ்ந்து
இறைஞ்சுகிறோம் நாம்
காத்திடுவாய்
உனை வணங்கும் இவ்வினத்தை,
நிலைமைகளைச் சீராக்கித்
தந்திடுவாய், எம் தாயகத்தில்
நிம்மதியாய் வாழ்வதற்கு.

● ஏயாறே சத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபிக்கப்பட்ட பூமி

எப்போது
இந்த மோக மலர்கள்
வண்டுகளின் வாய்களில் இருந்து
போதை ரசங்களை
உறுஞ்சத் தொடங்கினவோ
அப்போதே
இந்த பூமிக்கு
உன் சாபம் இறங்கிவிட்டது

எப்போது
இந்த ஒப்பனை அழகிகள்
நிர்வாண தேவதைகளாய்
வீதி வலம் வர
மறைக்கப்பட்ட மங்கையரின்
ஆடை கிழிக்கப்பட்டு
மனிதாபிமானம் புதைக்கப்பட்டதோ
அப்போதே
இந்த பூமிக்கு
உன் சாபம் இறங்கிவிட்டது

எப்போது
மஷூதி தேவாலயங்களை
பலிபீடங்களாக்கி
உயிர்த்துவம்சம் செய்த
அயோக்கியர்கள்
சிம்மாசனம் ஏறினார்களோ
அப்போதே
இந்த பூமிக்கு
உன் சாபம் இறங்கிவிட்டது

எப்போது
குடிபெயர்க்கப்பட்ட மரங்களைக்
குடியமர்த்தச் சொல்லி
கோட்டுத் தீர்ப்பு வந்தும்
வெளியேற்றப்பட்ட மக்களின்
விபரங்களைக்கூடத் திரட்டவில்லையோ
அப்போதே
இந்த பூமிக்கு
உன் சாபம் இறங்கிவிட்டது

ஏதேன் தோட்டத்தில்
விலக்கப்பட்ட கனியை உண்ட
ஆதாமைத் தூக்கி
நாகதீபத்தில் எறிந்தும்
மனிதவர்க்கத்தை இந்த பூமியில்
சஞ்சரிக்க இடமளித்தவனே
உன்னை சிரம்தாழ்த்தி வணங்கும்
உன்
நல்லடியார்களுக்காக
எல்லோரையும் மன்னித்தருள் !

● **ஜலால்டீன் மஹாகவி.**

---

## இரண்டு கல்லறைகள்

முகத்தைச் சுளித்தபடி
அன்றே இறந்து விட்டது என்பூமி

துரத்தி மொய்த்த சூரியனும்
மாறிப்போனது

மேக ரதம் செலுத்தும் சாரதியும்
அகாலமாகி விட்டான்
நேரம்
காலமறியாமல் பேராவசத்தோடு
தேநீர் அருந்துகிறது
கண்ணைக் கசக்கி அழுதபடி காற்று
ஆற்றின்மேல் நீண்டு படுக்கிறது

கனவுகள் பிணங்களாய் இறந்து
மிதக்கின்றன

தீரா அன்போடு ஒரு புன்னகையை
வெகு காலமாக ஒளித்து வைத்திருந்த
இரண்டு கல்லறைகளில் ஒருவன்
உயிரோடு புதைக்கப்பட்டிருக்கிறான்
பியானோக் கட்டைகள் மேல்
நடந்து திரியும் பூனையாக
சக மனித அடையாளங்களை இழந்து
நானும்

நேற்றிரவு ருசித்த நித்திரையில்
ஊற்றி வைத்திருந்தாள் மதுவை.

● **நபீல்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் மனவானின் விடிவெள்ளி.

மருதமலர் சோலையிலே
மலர்ந்திருந்த பூமகளை
மறையளித்த இறையெனக்கு
மனைவியாய் பரிசளித்தான்.

என் கற்பனைக்கு
கரு இவள்தான்
என் கவிதைகளுக்கு
பொருளும் இவள்தான்.

என்னவள் முனவ்வறா
ஏற்றமான சொல்லிவள்
முழுமதியில் பாதியிவள்
முகம் மலர்ந்து சிரிப்பவள்.

வருடங்கள் நாற்பதை என்னுடன்
வாழ்ந்து முடித்தவள்
வாழப்போகும் காலங்களும்
வல்ல இறைவனே பொறுப்பாவான்.

கடந்துவந்த காலங்களில்
நடந்துவந்த பாதைகளில்
பதிந்துவந்த பாதச்சுவடுகளின்
பரினாமம் எத்தனையோ.

கண்களிலே நீர்தேங்க
கஸ்டமெனும் கடலிலே
கவலையெனும் அலையோடு
கடினமாய் போராடினாய்.

துன்பமெனும் குளிர்
மழையிலே நனைந்து
துயரமெனும் வெள்ளத்திலேநான்
தத்தளித்த போதெல்லாம்
துணையாய் வந்து
கரம்கொடுத்து காப்பாற்றினாய்.
என் உள்ளத்தின்
அகல் விளக்காய்
இல்லத்தின் ஒளிவிளக்காய்
வாழ்க்கையை தலையில்சுமந்து
வாழ்வளித்த என்னையும்
உள்ளத்தில் சுமந்தாய்.

என்னோடு வாழும்வரை
எனக்காக செய்தசேவையை
ஏடுகளில் எழுதிட
இந்த யுகம்போதாது.

இத்தனைக்கும் பிரதிபலனாய்
எதையேனும் பரிசளிக்க
என்னிடம் ஏதுமில்லை
என்னுயிரைத் தவிர.

இறையழைப்பு வரும்வரை
எஞ்சியுள்ள காலங்களில்
உடல்நலமும் ஆரோக்கியமும்
உளநலமும் பெற்று
நோயற்ற வாழ்வாய்
வளமோடும் நலமோடும் நீவாழ
வல்ல நாயன் அல்லாஹ்விடம்
இருகரமேந்தி பிரார்த்திற்கின்றேன்.

● **ஜீனாராஜ்.**
**(ஏ. எல். இஸ்லாமுல் ஹுஃசைன்)**

---

**ஹைக்கூ:**

● ● ●
பிடிபட்ட பட்டாம்பூச்சி
விடச்சொல்லிக் கெஞ்சுகிறது
குழந்தை..!

● ● ●
கருக்கட்டும் போதே
பெயர் சூட்டப்படுகின்றது
புயலுக்கு..!

● ● ●
விலை குறைந்த சீனி
போகும் இடமெல்லாம் கிடைக்கிறது
ஏமாற்றம்..!

● அஸாத் ஏ சத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருப்பு மனிதர்கள்

தொட்டு உணர முடியாதபடி
மனித இடைவெளியாய்
தொலைவில் தெரிகிறது

நெருப்பை நாம்
புதைப்பதில்லை
மனிதன் மடிக்குள்
அள்ளி நிறைத்திருக்கிறான்

கால்கள் இன்றி இருப்பதால்
யாரையும் தேடுவதில்லை
நெருப்பு

நெருப்பினை முற்றத்தில்
மனிதன் வைத்திருப்பதில்லை
நெருப்பு வீரியம் கொண்டால்
பூட்டினை நாம்
எங்கு தேடுவது

நம் தாகத்தை
ஒருபோதும் அணைப்பதில்லை
எரி நெருப்பு

நீயும் நெருப்பும்
ஒன்றுதான்
இரண்டிலுமே இதயங்கள் இல்லை

இன்றும்..
நெருப்பு மனிதர்களைக் கண்டேன்
தலையில் முளைத்த நெருப்பை
சிலர் விழுங்கிக் கொண்டிருந்தனர்..!

● **மருதமுனை விஜிலி.**

## கானகமும் காப்பாளனும்

கானகத்தின் காப்பாளன்
இக்காட்டினது ராஜா
நானேதான்
கர்ச்சித்து நின்றது சிங்கம்

அடர்காடும் எனதே இந்தக்
கானகமும் என் நிலப்பரப்பே
நிலப்பிரபும் நானே
தலைநிமிர்த்தி நின்றான் வேந்தன்

விலங்குகளின் வேந்தன் நான்
வீண்தர்க்கம் வேண்டாம்
வீரம்காட்டியது சிங்கம்

தர்க்கத் தீவிரத்தால்
கோப மேலீட்டால்
மன்னன்கை வாளுறைக்குள்
நுழைவதற்குள்
சிங்கம் தன்இரையுடன்
நகரத் தொடங்கியது

● **நியாஸ் ஏ ஸமத்.**

---

*குறும்பா.*

## நாலுகால் நாயகன்.

ஐம்பதிலே பெண்ணெடுத்தார் சிங்கர்
அவளவரின் அரைவயது யங்கர்
இந்தமணம் பொருந்தாமல்
ஈடுதர இயலாமல்
நொந்துவிட்டார் இன்றவரோ ரிங்கர்.

● **பாலமுனை பாறூக்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவெல்லாம் நீயே

வசந்த விழா மேடையிலே
வந்தமர்ந்து பார்த்திருக்கும்
வண்ணத்து பூச்சி போல
அழகே உன் நினைவலைகள்

மனமழுத சில பொழுதில்
மழைச்சாரல் போல வந்து
நினைவுகளைத் தூற விட்டு
நீந்தி விளையாடுகிறாய்

உண்ண ஒரு பிடி எடுத்து
வாயருகே கொண்டு செல்ல
ஓடிவந்து ஊட்டி விட்டு
ஓரத்தில் நிற்கின்றாய்

சுமை கனத்து சிரசேறி
சோர்ந் திருந்த நாழிகையில்
ஓடி வந்து கைகொடுத்து
இறக்கி விட்டுப் பார்க்கின்றாய்

சாம நிலாப் பொழுதில்
சாய்ந்திருந்த திண்ணையிலே
தூக்கம் தழுவுகையில்
தாலாட்டுப் பாடுகிறாய்

சிந்தையிலே நின்றுலவி
தெம்மாங்கு பாடுகின்ற
செந்தூரப் பொன் நிலவே
நினைவெல்லாம் நீயே
நின்று விளையாடுகிறாய்

● மருதமுனை ஹஸன்.

## அதிகாலை வேளையிலே

மெல்லிசை பாடி பறவைகள் வாழ்த்த
மேதினி அழுக்கை காக்கைகள் நீக்க
மெல்லிய பனியும் போர்வையை அகற்ற
மேகமும் அணிந்ததோ செந்நிறப் பட்டு.

போதையில் சிவந்த கண்களை விரித்து
புவியினைக் கதிரோன் நோக்கியே சிரிக்க
வேதனை கொண்டு அல்லியும் மயங்க
விளக்கென விரிந்தது தாமரை மலர்கள்

கடலுக்குள் சென்ற கணவனைக் காண
கரையினில் நிற்கும் மனைவியர் கூட்டம்
படகுகள் கரைவரும் திசையினை நோக்கி
பாவையர் மனமும் கொண்டிடும் ஏக்கம்.

மார்கழிப் பனியும் கொஞ்சமாய் விலக
மாணவர் செல்வம் பாதையை நிறைக்க
ஆர்கலி போர்த்திய இருள் நன்கு விலக
ஆவினம் மேய்ந்திட அடவிக்கும் செல்லும்.

பலபல ராகங்கள் பறவைகள் இசைக்க
பதில்பாட்டுப் பாடி அணில் தவிலடிக்க
மலைநாட்டு மங்கை தேயிலை பறிக்கும்
மனநிலை கண்டு கதிரவன் வியக்கும்.

● அலியார், சம்மாந்துறை.

---

## *குறும்பா.*

## விண்ணர்.

முகநூலில் இவர்தானாம் வின்னர்
முந்நூறு 'லைக்'பெற்ற மன்னர்
இருவரியில் பதிவிட்டு
இவர்பெற்ற 'லைக்'குகளால்
பேர்புகழாம் விழாச்செய்தார் 'விண்ணர்'.

● பாலமுனை பாறூக்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மழை அழகி

எத்தனை நாள் காத்திருந்தேன் அன்பே
வந்துவிட்டாய்
என் வீடு முழுக்க உன் அன்பின் ஈரம்.

மின்னல் சிரிப்பழகி
இடிமுழக்கப் பேச்சழகி
குளிர்ந்து வந்து உடல் தழுவும்
இதமான நீ அழகியே.

உன்னை வர்ணித்து உன்னில்
ஆசைகொள்வதற்காய்
என் மனைவி
என்னைத் திட்டமாட்டாள்
ஏனெனில்
அவளுக்கும் உன்னைப் பிடிக்கும்.

கொடையரசி நீ வந்துவிட்டால்
முன்பெல்லாம்
கொடையரிசி கொடுக்கப்படுமே
இப்போதெல்லாம்
இடுப்பளவு
நீ தந்த பரிசு மட்டுமே வற்றாமல்..

வீதிகளிலும் வெள்ளப் பண்டிகை
உன் வருகையின் தொடர்ச்சியால்..

ஓ.. என் மழை அழகியே!
பள்ளங்களிலும்
உன் கலை வெள்ளம்.
உனக்கொரு பாடல் எழுதி
விடிய விடிய இசையமைக்கின்றன
தவளைகள்.

ஓ.. என் நீரழகியே!
நீ என் தோழி.
என்னை எந்த வேலையும்
செய்யவிடாது
சுருண்டு படுக்கப் போர்வை தருகிறாய்.

குளிர்காற்றால் என்னைத் தடவி
தூங்கவைத்துவிட்டு

▸▸

கள்ளத்தனமாய்
என் அறையை ஆக்கிரமித்த
கூதலழகியே.

உன் விளையாட்டால்
அடுப்புகள் பல எரியமுடியாமல்
கிடப்பதை
நீரழகி
நீரறிவாயா?

மழை அழகியே
போய்
மறுபடியும் வா.

● ஜே.வஹாப்தீன்.

# யாரும் இப்போது யாருமல்ல

மழைக்குப் பயந்து ஒரு மரத்திற்குக்
கீழே நின்றேன்.
எனக்குப் பயந்த மரம்
தெருவில் குடையுடன் வந்தவரிடம்
சேர்ப்பித்தது.
இடைநடுவில்
அவர் தன் வீடு வருவதை
அறிவிக்கிறார்.
மழை
நனைக்கத் தொடங்கியது.
மின்னலும்
முழக்கமும்
துரத்திக் கொண்டிருக்கின்றன
இன்னும் 300 மீற்றர்
எனது வீட்டுக்காக.
நானும் பெரும் மழையானேன்.

● டீன் கபூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகருமென் பொழுதே..!

நின்
வசமென
வருதுயிர் கீற்று

வாழ்வெனும்
வாயிலை
வசந்தத்தில் வார்த்து

கையிடை
கோர்த்தெனைப்
பற்று

காதலின் தூவலில்
நாம் புதுக் கூற்று

இருதயம்
உறைபவன்
நீயெனச்
சேர்த்தேன்

இலை விடும்
தளிரென
எழுந்துன்னைப்
பார்த்தேன்

உன் பாதங்கள்
உயிர் நாளங்கள்
உலா போகலாம்
உழல் மேகங்கள்

வான்
வெளி மீதினில்
மீனென வாழ்வோம்

வீழுமந்த
மழையென
வந்திங்கு
சேர்வோம்

நீங்கா
பொழுதே
▸▸

நீ துணை
எனதே

நித்தமாய்த்
தொழுதே
நகருமென்
பொழுதே..!

● ச. ஜெயலட்சுமி
(தமிழ் நாடு, இந்தியா)

## சபதம்

சாலை மரங்களே...!
இந்தப் பாதையில்
எப்போதாவது
அவளை நீங்கள்
பார்க்க நேர்ந்தால்-

அவளிடம்
சொல்லுங்கள்...

அவளுக்காக
இனி நான்
காத்திருக்கப்போவதில்லை-
என்று

பார் போற்றும்
பெரும் கவிஞனாகும்
கனவுத் தாகங்களோடு
புறப்படுகிறேன்..

என் கவிதைகளுக்காக
அவள்
காத்திருக்கும் காலம்
வெகு தூரத்தில் இல்லை.

● எஸ். ரபீக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னவளுக்கு 62

எனக்குள் அவளாகி தினம்
அவளுக்குள் என்னை புதைத்து
வாழ்வு தந்தவள் என்னவள்.

ஓலைக் குடிசைக்குள் ஒற்றுமையாய்
ஒழுகி வடிந்த மழைநீருக்குள்
வாழ்வை தேடியவள் என்னவள்.

வறுமை வாழ்வின் வரையறைக்குள்
பொறுமையாய் வசந்தத்தைத் தேடி
வாழ்தலைப் புரிந்தவள் என்னவள்.

பசியும் பட்டணியும் நிறையாவயிறும்
நிம்மதியில்லா நித்திரையும் என்றும்
நிறைவென நினைத்தவள் என்னவள்.

அன்பை விதைத்து அதில்
ஆணவத்தை தொலைத்து பண்பான
பக்குவத்தைக் கொண்டவள் என்னவள்.

வாய்மெய் தவறாமல் பொய்யை
அழித்து உண்மையை நிலையாக்கி
உயரிய வாழ்வுதந்தவள் என்னவள்.

வறுமையே வாழ்வான போதும்
தினம் தினம் பொறுமைகாத்து
பொக்கிஷமாய் நின்றவள் என்னவள்.

அன்பாய் அரவணைத்து ஆனந்தமாய்
நாளும் சுகம் தந்து
அன்பால் வென்றவள் என்னவள்.

ஐவேளையும் ஆண்டவனைத் தொழுது
அவன் வழி நடந்து
நல்லதை செய்கிறாள் என்னவள்.

இன்னும் என்னில் அவளாகி
இதயம் மகிழ்ந்துகளிக்க
என்னவளுக்காய்
இறைவனிடம் பிரார்த்திற்கின்றேன்.

● பி. எம். எம். ஏ. காதர்.

## தேடல்கள்

கண்களின்
தேடல்கள்
பார்வை உள்ளவரை

கால்களின்
தேடல்கள்
பலம் உள்ளவரை

உறவுகளின்
தேடல்கள்
அன்புள்ளவரை

உணவின்
தேடல்கள்
பசியுள்ளவரை

நீரின்
தேடல்கள்
தாகமுள்ளவரை

பறவைகளின் தேடல்
பழத்தை உண்டு
பசி தீர்க்கும் வரை

பிறரின்
தேடல்கள்
தேவையுள்ளவரை

கல்வியின் தேடல்கள்
கடல் நீரை
கணிப்பீடு செய்யும் வரை

குழந்தையின் தேடல்
பசிதீர்க்கும்
அன்னையை காணும் வரை

அமல்களின்
தேடல்
சுவர்க்கம் செல்லும் வரை

மனதின்
தேடல்
மரணமுள்ளவரை......

● சுலைமாலெவ்வை
சின்னத்தம்பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

•••

கதவைத் தட்டும் சத்தம் கேட்கிறது
யாரது? என்கிறேன்.
ஜன்னலை உரசுவதும்
ஒரு மொழிபோல இருக்கிறது.
அசையும் மரமொன்றுக்காக
செவிசாய்க்கிறேன்.
ஓர் அருவி பாய்வதை உணர்த்துகிறது
நரம்பு.
சற்றுப் பொழுதிற்குள்
ஓ...கோ...என்றது வெளி
இரைந்த சத்தம் மலையை
நகர்த்துவதாய்
இருக்கிறது.
அவசரமாகப் போர்வையை
உதறுகிறேன்
வானமும் பூமியும்
ஒரே நிறத்தில்
மனதைக் தொட்டது குளிர்.

**● டீன் கபூர்.**

---

•••

மெத்தையைக் கொடுத்து
ஒரு 'பன்பாய்' இழைத்துக் கொண்டு...

மின்சாரத்தை விற்று
விறகு வாங்கிக்கொண்டு...

திடீரென இறந்த காலத்துள்
புகுந்து நடக்கிறேன்

▸▸

சிந்தையில்
சிதையாமலிருக்குமந்த ஊரை
நுகர்கிறேன்

திண்ணைப்படிகளில்
வெற்றிலை வாயால்
வெண்பாவின் ஈற்றடிகளை
மென்று துப்பும் கிழவிகள்
பொய்யெனும் போதை
புழங்காத குடிசை

எரிதழல் இல்லா
தெரு

கற்பகத்தில்
கந்தகம் படியா காற்று
கலப்படமில்லா நாற்று

விஷ வினாடிகள் தரா
நிம்மதிக் கடிகாரம்

ஊரெல்லாம் முளைத்த
வெட்கமும் வீரமும்

நீண்ட விழுதிறங்கிய
ஆலமரங்கள்

தோண்டிய இடமெல்லாம்
மண்புழுக்கள்

பெருமை பூசாத கல்விகள்
பிரிவினை பேசாத பள்ளிகள்

கோயில் மாடத்தில்
சுதந்திர புறாக்கள்

வெள்ளந்திச் சிரிப்போடு
மீடியாக்கள்

திரும்பிப் பார்க்கிறேன்
நிகழ்காலம்
ஒரு புள்ளியில் மறையும்
நரகமாய்....

**● முகமட் றாபி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

•••

தேர்தல் வரும் பின்னே
மிதப்பு வரும் முன்னே
மாலை விழும் மயங்கிடுவர்
காலை வரும் தூங்கிடுவர்

குழுக்குழுவாய்ச் சேர்ந்திடுவர்
வாக்கு கணக்குப் பார்த்திடுவர்
ஊரூராய்த் தேரிழுப்பர் - சிலர்
உறவாடிக் கெடுத்திடுவர்
வேண்டாத விருப்பிலக்கம்
வினை கொண்டுவரும்
இணங்கிய எண்களுக்கு
ஒப்பந்தம் போட்டிடுவர்

தலைவர் வருவாரென்றால்
தலைகீழாய் நின்றிடுவர்
ஊருக்கு ஒரு பேச்சு
உளறி போக்கிடுவார் பொழுதை

இருப்பதோ கற்றல் காலம்
சிந்தித்து, நின்று நிதானித்து
தேர்வு எழுதுங்கள்
சமூக நலன்களுக்காய்.

**● ஏ. எச். ஏ. மூாஹிர்.**

---

*லிமரைக்கூ.*

## ஒன்லைன்

ஒன்லைனில் நடக்கிறதாம் வகுப்பு
ஒழுங்குசெய்தார் அப்பா, மகன்
ஒன்லைனில் 'லவ்வ'ரோடு களிப்பு!

**● பாலமுனை பாறூக்.**

•••

நாலு பக்கமும்
கற்சுவர்கள் எழுப்பி
கூரையையும்
கற்களால் அடைத்து
குகை வாழ்க்கை
வாழ்ந்து
கொண்டிருக்கிறார்கள்
அவர்கள்

உயரமான
மதில்களைக் கட்டி அதில்
இரும்புக்
கதவுகளையும் போட்டு
இறுகப் பூட்டிக் கொண்டிருக்கிறார்கள்
அவர்கள்.

இதோ நான்
காற்றோடும்
மழையோடும்
குதூகலமாக வாழ்ந்து
கொண்டிருக்கிறேன்
எனது ஊரில் சந்தோசமாக.

**● முகம்மது றியால்.**

---

•••

பொய்யால் பொருள் சேர்த்துப்
பெருமையுடன் வாழ்ந்தாலும்
மெய்யாம் மரணம் வரும்
பொய்யுடன் புதைந்தே போக!

**● எம். எச். ஏ. கரீம்.**

---

•••

நாடுதனைக் கட்டி
நலங்காக்கப் போனவர்கள்
மாடுகளாய் மாறினரே மாதவா-
ஆடுகளும்
மாறி மரந்தாவி மந்திகளாய்
ஆனதனால்
நாறிக் கிடக்குதண்ணே நாடு

**● மருதமுனை ஹஸன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

•••

ஏறி இறங்கும் வேறுபட்ட
சீதோஷ்ணங்களை கடந்து
அவள் நடந்து கொண்டிருந்தாள்
மார் முட்டி அருந்த கேட்ட
குழந்தையை தோள் கூட்டி
அணைத்துக் கொண்டாள்
இன்னும் சற்றுதூரம்தான் போய்விடலாம்
குழந்தையின் பசி ஒப்பாரியாக
உருத்தரித்தது
வேகம் முடுக்கினாள்
செருப்பு பட்டி அறுந்ததால்
பாதங்களின் முன் அரைப்பகுதியில்
வெம்மை கொப்புளங்கள்
மிக அலட்சியமாக பொறுத்துக்
கொண்டாள்
குழந்தையை தொட்டுப் பார்த்தாள்
காய்ச்சல் அனலாகி எறிந்தது
மூன்று இரவுகள் கடந்து விட்ட
பழங் காய்ச்சல்
சர்வ நிச்சயமாய்
இயந்திரங்களிலும்...
சிகிச்சைகளிலும்.....
மனிதன் என்கிற வஸ்த்துவிலும்
அவள் நம்பிக்கையிழந்தபோது
தன் குழந்தையின் ரோகத்தை
மூடிமறைத்து தோற்றுப்போனாள்
அழுது...
விழித்து...
முந்தானையால் விழி துடைத்து
மீள வெடித்து அழுது
இரண்டு பங்கு முகம் கொண்டபோதுதான்
தூரச் சாமியாரை அறிந்து கொண்டாள்
அரை குறையாய் வேக வைத்த
நம்பிக்கையோடுதான்...
புறப்பட்டிருந்தாள்.
குழந்தை மூக்கொழுக தூங்கியிருந்தது
சுருங்கி வெடித்த பாறைத் தொகுதியை
கடந்தபோது
சாமி எதிரிலிருந்தார்.
குழந்தையை கிடத்தினாள்
'அப்படிப் பார்க்காதே நான் குரூரம்
கழிந்த மாமிசம் உண்ணா
நிஜ மனிதன்'
▸▸
நம்பிக்கை கொண்டாள்.
மூலிகைக் கொத்தால்
தலையிலிருந்து அடிவரை
தடவினார்.
இடித்து வடித்த கசாயம்
பருக்கினார்
குழந்தை கண் திறந்து
மோவாய் கோண சிரித்தது.
தாயின் நெஞ்சு மகிழ்வால்
புடைத்தது
சாமி தீர்க்கமாய் உரைக்கலானார்
'குழந்தை சிரித்தால் உலகு
பொலியும் குழந்தை அழுதால்
உலகு சிதையும்'.

**● குர்சித் மஜீத்.**

---

•••

சாந்தியும் சமாதானமும்
உண்டாவ தாகுக!
இனியதோர் காலை வாழ்த்து
இலங்குக,மகிழ்ச்சி பூத்து!
பூத்திடும் களிப்பில் உள்ளம்
பொலிந்திடப் பகிர்க அன்பை!
அன்பினைப் பகிர்வ தாலே
அகத்தினில் மகிழ்ச்சிப் பூக்கள்
பன்மடங் காகிப் பூக்கும்
பகிர்கவே, பகிர்ந்து வாழ்க!

**● பாலமுனை பாறூக்.**

---

•••

செத்தவனைப் புதைப்பதனை
வெறுத்தார்
சிதையினிலே போட்டவனை எரித்தார்
இழிசெயலென் றறிந்திருந்தும்
இனவெறுப்பு மேலுறவே
புத்திகெட்டோர் அஃதினையே
தொடர்ந்தார்.

**● காப்பியக்கோ**
**ஜின்னா ஷரிபுத்தீன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

•••

நாறிக் காய்ந்த ஆற்றுக் கருவாட்டின்
நிறத்தில் இருள் கவிந்தது.
வாசல் முற்றத்தின் ஈரப்பலா மரத்தின்
கீழ் சாய்மனை கதிரையிட்டு அவன்
அமர்ந்திருந்தான்
அவளை எதிர்பார்த்து
நான்கு விரல்களின் நகங்களை கடித்து
முடித்திருந்தான்
அவள் வந்திருக்கவில்லை
கொடிமல்லிப்பூ வாசம் முன்னே வர
பின்னே அவள் வந்தாள்.
மாமிச பிண்டத்தை கண்டு நாவூறும்
நாய்போல
அவன் ஆசை வெளித்தள்ள
குதித்தெழுந்தான்.
அவள் வார்த்தை முடிச்சுகளின்
ஏற்ற இறக்கங்களை
ஒவ்வொன்றாய் அவிழ்த்துக்
கொண்டிருந்தாள்
அவன் அதிர்ந்து அடங்கி
உருச் சிறுத்து ஒரு தேரையின்
வடிவிலானான்.
'....ஆகவே பிரிந்து விடலாம' எனும்
வார்த்தையை எழுத்துக் கூட்டிச்
சொன்னாள்
கோள்களின் சுழற்சியின் எதிர்த் திசை
வழியில் அவன் சுழலாயினான்
இரவு தூங்கி வழிந்தது.
அவன் விழித்துக்கிடந்தான்
கண்ணிமை மடிப்புள் ஆயிரம் விஷ
ஊசியின் உபாதை
யோசித்தான்..
நடந்தான்...
அமர்ந்தான்...
ஆவேசமாய் நடந்தான்
இரவிரவாய்
அவளுக்காக பக்குவமாய்
▸▸
உருச் சமைத்த கனவுகளை
களஞ்சிய அறையுள் இருந்தெடுத்து
அடுக்கினான்.
முப்பது வீத விலைக்கழிவில்
அவற்றை விடிகாலையிலேயே
விற்பதென தீர்க்கமாய் முடிவெடுத்தான்.
இப்போது அவன் மனம் காற்றைப்
போல எடை குறையத் தொடங்கிற்று.

● குர்சித் மஜீத்.

---

## நிழலை நுகர்பவன்

அந்தி வெயில் அமைதியாய்
தோட்டத்தில் மேய்கையில்
வண்ணப் பூக்கள் மலரும் சத்தத்தால்
அதிரும் தண்டுகளில் உட்காரும்
வண்டுகள் பாடும் ஓசையுடன்
பூக்களின் வாசம் காற்றில் உரசி
இசைக்கிறது
இனிமையான கானத்தை
கிளையிலிருந்து இலையொன்றை
மாருதம் திருகுகையில்
முறிந்த இலை
தரையில் விழும் சத்தத்தோடு
சருகுகளின் மத்தியில் அமர்ந்த
புல்லின் துணியில் குந்தியிருக்கும்
நீர் பலூன்களின் உடைவில்
சூழலின் விரியும் ஓசையும்
வாடிய இலைச் சருகுகளின் அடியில்
ஊர்ந்து திரியும்
பூச்சிகளின் புலம்பலும்
இலைகளில் தங்கியிருந்த
நீர்ப் பொட்டுக்கள்
குத்துச்சாய்வில் நகரும் ஒலியும்
சேர்கிறது
மரத்தினடியில் நிழலை நுகர்பவனின்
இதயத் துடிப்புடன்...

● நௌபல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதி

பெரு மழை
நீள் நதி
பருகிவிடுவதில்லை
துளியின் பிரவாகத்தை
சூறைக் காற்று
கரும் பாறை
சிதைத்து விடுவதில்லை
செடியின் வியாபகத்தை
நெடும் வானம்
சுடும் வெயில்
மடித்து விடுவதில்லை
பறவையின் பாதையை
பொய்ச் சாட்சியம்
நூறு வாக்குமூலம்
குத்திவிடுவதில்லை
நீதியின் கண்களை

● அலறி

---

## சிறகுகளை பரிசளிக்கும் புத்தகம்

எனக்கான நம்பிக்கையின் சிறகுகளை
பரிசளித்திருக்கின்றன புத்தகங்கள்
அது இலக்கற்று தூர்ந்து கிடக்கும்
என் வாழ்விற்கான வழியை
ஒளி கொண்டு நிரப்புகிறது
இனி நான் வாழ்வேன்
எனக்குரிய தங்க உலகினை
அடைந்து கொள்ள காலத்தோடு
போராடி
எல்லாத் தகமைகளோடும் வாழ்வேன்
எல்லைகளற்று விரிந்து கிடக்கும்
இந்த ஆகாயத்தை
எனது இரண்டு சிறகுகளாலும்
மிக எளிதில் கடப்பேன்
என் சிறகுகளில் வலிமை இருக்கும்
கடைசிக் கணம் வரை கடப்பேன்
▸▸
கடந்து கொண்டுதான் சாவேன்
புத்தகத்தோடு ஊடாடிப் பாருங்கள்
உங்களுக்கான சிறகுகளை
நிச்சயமது பரிசளித்தேயாகும்
அதன் ஒவ்வொரு பக்கமும்
நமக்கான சிறகுகள்தான்

● ஜமீல்

---

## முகநூல் விந்தைகள்

பிரபஞ்சத்தில் தனித்து விடப்பட்ட
பாலை வனத்தைப் போல
கொடுந்தணல் வீசும் மனித
மனங்களையும்
ஆற்றங்கரையில் வளைவு கொண்டு
ஈரங்கொள்ளும் நாணற்புறுகளாய்ப்
புறப்படும்
இதயங்களையும் நிரப்பிக்
கொண்டிருக்கிறது
முகநூல்:
வசப்படாத வார்த்தைகள்
கைகோர்த்தபடி
எழுந்து நடக்கின்றன
எரி நெருப்பில் விழும் பஞ்சுப்
பொதிகளாய்
பல்லாயிரம் பரவசங்கள்
நிமிர்ந்து நிற்கின்றன
அதிசயங்களும் நொடி வித்தைகளும்
மூக்கில் விரல் வைக்கின்றன
விரல் நுனியில் உச்சி தொடும்
சிந்தனைக் கோபுரங்களுமாய்
அப்பாவிகளின் கல்லறைகளும்
மெழுகு வர்த்தி உறையும் பிரமைகளும்
அரங்கேறும் சூட்சுமம்
முள்ளந்தண்டு கழற்றியபடி
சில விந்தைகள் எகிறுகின்றன
கண்களைக் கழற்றி வைக்கிறேன்
உச்சந்தலை விறைக்கிறது
எனது வாசலுக்குள்
வரம்பு கட்டுகிறது முகநூல்.

● மருதமுனை விஜிலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எல்லாமே அவன்

இளநீல மேக வானம்
இரவோடு பேசும் மௌனம்
உயர்ந்தோங்கி வளர்ந்த மரங்கள்
கிளை மீது உறங்கும் உயிர்கள்
பசுமை படர்ந்த வெளியில்
பாட்டோடு சுழலும் காற்று
ஆகாய கங்கை மேலே
அதிலெட்டிப் பார்க்கும் நிலவு
இதற்கென்று யாரு மிங்கே
ஜெகமீதில் இல்லை நிஜமே
அவனன்றி உலகை ஆள
வேறாரு உண்டு மனமே

● மருதமுனை ஹஸன்.

---

## அடையாளம்

லவங்கப் பட்டைக்குள்
லாவகமாக உயிரொன்று
நீந்து கொண்டிருக்கிறது.

கற்பூரமொன்று
காற்றோடு காற்றாய்
கரைவதைப் போன்றதல்லவது.

இரும்பின் இடுப்பு வலியில்
பிரவசமாகும் வாளொன்றினைப் போல,

கண்ணீர்த் துளிகளால்
கருங்கல் செதுக்கிய சிற்பத்தினைப் போல
அக்கினிக் குழம்பை
பனியால் உருக்கி
மீட்சி பெற்று
மீண்டெழுவது

உயர்ச்சி பெற்று
உயர்ந்திடவன்றோ...

● பாத்திமா ஸுபா.

## ஒரு சிவலை சிவந்து சிரிக்கிறது

செந்தணல் சிரிக்கிறது
சிவலை நாம்பனின்
கண்களிலோ கண்ணீர்
அழுது முடிந்தால்
அது அநாதை இல்லை
இடையில் தரகரின் குறுக்கீடு
குறி சுடுதல் நிறுத்தப்படுகிறது
விலை போகிறது
சிவலை நாம்பன்

கொல்லன் கையில்
சிவந்து பழுத்திருந்த
சூட்டுக்கோல்
தண்ணீரினுள் வெடிக்கின்றது

புதுக் காவலனோ
தனது கைத்தீனியில்
உரிமையூட்டி உணவளித்தால்
சிவலை சிரிக்கும்
ஓடியும் உழைக்கும்

விலை கொடுத்த வீமனின்
விம்பமோ
கத்தியுடன் காட்சி தரும்
கசாப்புக் கடைக்காரனாக
விஸ்பரூபமெடுத்தால்
சிவலை செந்நீரில் மூழ்கி
மாமிசம் புசிக்கும்
மானிடன் பசிக்குப் பலியாகும்

கசாப்புக் கடையின்
கறைபடிந்த கரங்களோ
அடுத்த நாம்பனுக்கு
நல்வரவு கூறும்.
(1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்)

● மு. மு. மு. பாசில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பெரும் துறைகள்.

வைத்திய துறை
காவல் துறை
ஊடகத் துறை
முப்பெரும் துறைகளாம் இவை
இப்பெரும் துயர் துடைக்க
தலை தெறிக்க
ஓடிக்கொண்டிருக்கின்றன.

தேசத்தை தேய விடாது
தோளில் வைத்து
தேரிழுக்கின்றனவே
தேகமெலாம் சிலிர்க்கிறதே
தேயும் இப் பெரும்
துறைகளை யெண்ணி!

தாயக தரணியிலே
ஓயாத அலையாக
மாய்கின்றனவே
வாய் திறந்து வர்ணிக்க
வார்த்தையில்லை என் வசம்!

எம்முயிர் காக்க
தம்முயிர் பொருட்டில்லாது
அடுத்த உயிராவது
காப்பாற்ற தடுத்து நிறுத்தற்
போராட்டம் பண்ணி
மருந்தோடு மாய்கின்றது
வைத்திய துறை யது!

இல்லத்திலே அமர்ந்து
உள்ளதை பகிர்ந்து
கேலியும் கிண்டலுமாய்
நாட் கழிக்கும் எமக்கு
இருந்த இடம் தேடி
இல்லம் நாடி
எம துள்ளங்களுக்கு
உள்ளதை உள்ளபடி
தகவலை திரட்டி
உண்மை நிலை யறிந்து
உடனுக்குடன் தகவல் தரவென
வெய்யிலில் வேகுகிறது
ஊடகத் துறையது!

▸▸

முப்பெரும் துறை யென
சாதுவாய் சொல்லி விட்டு
கை கா(க)ட்டி மறைய என்னால்
முடியாது!

உயிரைப் பணயம் வைத்து
பயணிக்கின்றன இத்துறைகள்
இத் துறைகள் என்ன
இயந்திரமா சொல்லுங்கள்
அதுவும் உயிர் உடல் கொண்ட
பிறவிகள்தானே - எம் போல
குடும்பம் பிள்ளைகள் என்று
வாழ வேண்டிய ஜீவன்கள் தானே
நிம்மதியாக எமை உறங்கவைக்க
நிம்மதியிழந்து நிற்கின்ற
மா துறைகளவை!

● மருதமுனை நிஸா.

---

# என் மனசு

எக்காளமிடும்
எரிமலையாய் வெடிக்கும்
கத்திக் கதறும்
காகம் போல் கரையும்
சேவல் போல் கூவும்
கொக்கரிக்கும்
ஓவென்று அழும்
அலறும்
துடிக்கும்
குதிரை போல கனைக்கும்
பின் - பறவை போல்
சிறகு முளைத்துப் பறக்கும்
வட்டமிடும்.

வாய் முளைக்கும்
வார்த்தைகள் பேசும்
வசனங்கள் எழுதும்
வசீகரிக்கும்
வசப்படாதவற்றுக்காய் ஏங்கும்
இறுதியில்
சும்மா கிடக்கும்.

● மருதமுனை ஹரீஷா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை இல்லா பெண்ணின் கதறல்

மாதத்தின் மூன்று நாட்களின் போது ஒரு
சில நாட்கள் தள்ளிப்போனாலும் நீ தான்
வந்திருக்கிறாயோ என சந்தோஷத்தில்
பொங்குகிறேன்!

பாவாடை நாடாவை கூட வலிக்குமோ
என்று தளர்வாய் கட்டி வழுக்கிவிடாதபடி
அவ்வப்பொழுது பிடித்துக்கொள்கிறேன்!

காட்டன் புடவைகளை தவிர எதையும்
கட்டுவதில்லை வெப்பத்தில்
நீ கலைந்துவிடுவாயோ
என பயந்து!

கலவி என்பதே மனதையும் உடலையும்
ஒருமிக்க செய்யும் ஒருவித
தியானம் போன்ற மெய்மறந்த
உணர்வுதான்,
அந்த உணர்வின் சுகத்திற்கு கூட
அடிமையாகாமல் நீ
உருவாகியிருப்பாயோ இந்நேரம்
என்றுதான் எனக்குள் நானே
எதிர்ப்பார்த்துக்கொண்டு இருப்பேன்!

என் வயிற்று தொப்புள்
என் தாயை நினைவு படுத்துகிறது,
நான் தாயாகாமல் இருப்பதையும்
நினைவு படுத்துகிறது!
உணவால் மட்டுமே இந்த வயிறு
நிரம்பிக்கொண்டு இருக்கிறது,
உன்னால் நிரம்பவேண்டும்
வா என் கண்மணியே!

▸▸

உணவை சுமந்தது போதும்
உன்னை சுமக்க வேண்டும்
வா எங்கே இருக்கிறாய்!?
அம்மா என்று யார் அழைத்தாலும்
உன்
ஞாபகம் தான் வருகிறது!

நாற்பதை நெருங்க நெருங்க நாடி
நரம்பெல்லாம் படபடக்கிறது!

உன்னை சுமக்க முடியாத என்னை
ஏன் சுமந்தாய் என்று என் தாய்மீது
கோபம் வருகிறது!

என் வலியை என் தாய்க்கு
நான் தரவில்லை என்று
சந்தோஷப்படுகிறேன்!

என் பிள்ளை தானே நீ,
நீயும் நீயில்லாத வலியை
உன் தாய்க்கு தந்துவிடாதே!

இதயத்தை இயங்கச்செய்யும் கடைசி
கொஞ்ச ரத்தம் இருக்குமென்றாலும்
அதில்கூட கருமுட்டை
உருவாக்கித்தான்
உனக்காக காத்திருப்பேன்!

எங்கே இருக்கிறாய்
வந்துவிடு என் செல்லமே!!

● ஜித்தன் ஆனந்த்.
(தூத்துக்குடி, இந்தியா.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை மஞ்சரியை அலங்கரிக்கும் ...

**29 கவிஞர்கள்:**


- காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன்
- சோலைக்கிளி
- அலறி
- மருதூர் மௌஜூன்
- ஜமீல்
- பாவேந்தல் பாலமுனை பாறூக்
- நௌபல்
- எம். எச். ஏ. கரீம்
- ஏயாறே சத்தார்
- ஜலால்தீன் மஹாகவி
- நபீல்
- ஜீனாராஜ்
- மருதமுனை விஜிலி
- நியாஸ் ஏ. சமத்
- மருதமுனை ஹஸன்
- அஸாத் ஏ. சத்தார்
- அலியார் (சம்மாந்துறை அலியார் T.O.)
- ஜே. வகாப்தீன்
- டீன் கபூர்
- எஸ். ரபீக்
- பீ. எம். எம். ஏ. காதர்
- சுலைமாலெவ்வை சின்னத்தம்பி
- முகமட் றாபி
- ஏ. எச். ஏ. ழாஹிர்
- முகம்மது றியால்
- குர்ஷித் மஜீத்
- மு. மு. மு. பாசில்
- ஜித்தன் ஆனந்த் (தூத்துக்குடி, இந்தியா.)
- மருதமுனை எஸ். ஏ. கப்பார்

**04 கவிதாயினிகள்:**

- பாத்திமா ஸூபா (அப்துல் றஊப் பாத்திமா ஸூபா)
- மருதமுனை நிஸா
- மருதமுனை ஹரீஷா
- ச. ஜெயலட்சுமி (தமிழ் நாடு, இந்தியா.)

**66 கவிதைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இச் சஞ்சிகை, இல. 378/2, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03, டிஜிட்டல் இன்பொமேசன் சிஸ்டம் (DIS) நிறுவனத்தினரால் ஏப்ரல் 2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org